தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Tamilmanam International Research Journal of Tamil Studies
*An Internationally Peer-Reviewed, Open Access Monthly Journal*
*eISSN: 3049-0723*
*Vol. 2 Issue: 01 August 2025*

# வரலாற்று நோக்கில் மணிமேகலைகாட்டும் பழந்தமிழர் வாணிகம்
# Ancient Tamil Trade in Manimekalai: A Historical Perspective

**ம.விக்னேஷ்,**
முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழகம், திருவாரூர்.
**முனைவர் க. ஜவகர்,**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழகம், திருவாரூர்.

**M. Vignesh,**
Research Scholar (Full time), Dept. of Tamil, Central University of Tamil Nadu, Thiruvarur. E-mail: vimalvickyma@gmail.com
**Dr. K. Jawahar,**
Assistant Professor, Dept. of Tamil, Central University of Tamil Nadu, Thiruvarur. E-mail: kajawahar@gmail.com

## Abstract:
The ancient Tamils traded with Greece and Rome through western ports, and with China, Java and other countries through eastern ports. It continues from the Sangam age. The Manimekalai points to trade relations between China and Java via eastern ports. Also it reveals the spread of Buddhist ethics with trade. Commerce of Manimegalai is continue from the Sangam commerce and spreading of Buddhism.

Key Words: **Domestic trade, foreign trade, commercial ethics, Buddhist ethics, Kalapra**

### ஆய்வுச் சுருக்கம்
பழந்தமிழர்கள் மேலைக் கடற்கரைத் துறைமுகங்களின் வழியாக, கிரேக்கம், ரோம் முதலிய நாடுகளுக்கும் கீழைக்கடற்கரைத் துறைமுகங்களின் வழியாக சீனா, சாவகம் போன்ற பல்வேறு நாடுகளுக்குமிடையே வாணிகம் செய்தனர். சங்ககாலம் முதற்கொண்டு இது தொடர்கிறது. அந்தவகையில் மணிமேகலை கீழைக்கடற்கரைத் துறைமுகங்களில் இருந்து சீனா, சாவகம் முதலிய நாடுகளிடையே நடைபெற்ற வாணிகத் தொடர்பைக் குறிப்பிடுகிறது. இந்த வணிகத்துடன் சேர்ந்து பௌத்த சமய அறநெறியின் பரவலாக்கத்தையும் மணிமேகலை குறிப்பிடுகிறது. அதாவது மணிமேகலை முன்வைக்கும் வணிகம் பௌத்த அறத்தின்வழிப்பட்டதாக அமைகிறது. சங்ககால வணிகத்தின் தொடர்ச்சியாகவும் பௌத்த சமயநெறியின் பரவலாக்க நோக்கிலும் மணிமேகலையின் வணிகம் அமைகிறது.

### திறவுச்சொற்கள்
உள்நாட்டு வாணிகம், அயல்நாட்டு வாணிகம், வாணிக அறம், பௌத்த அறவியல், களப்பிரர்

### ஆய்வு நோக்கம்
மணிமேகலை தமிழின் இலக்கிய, சமூகவியல், மெய்யியல் வரலாற்றில் ஒரு முக்கியமான பனுவலாக உள்ளது. வரலாற்று நிலையில் பழந்தமிழரின் வாணிகத்தை மணிமேகலை முன்வைக்கும் தன்மையைக் கண்டறிவது இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.

**முன்னுரை**

இன்றைய உலகமயச் சூழலில் பன்மைத்துவ அடையாளங்களின் மோதல்களும் கலப்புகளும் ஒற்றைமையப் போக்குகளின் மேலாதிக்கமும் மேலோங்கிவரும் நிலையில் இருக்கின்றன. இந்நிலையில் பன்மைத்துவ மொழி, இனம், கலை, அறிவு, பண்பாட்டுக் கூறுகளை முன்வைத்தலும் அவற்றின் முதன்மையாக்க நடவடிக்கைகளும் மேலெழுந்து வருகின்றன. ஒருவகையில் காலனிய அல்லது ஐரோப்பிய மையவாதம் அல்லது ஒற்றைக் கருத்தாக்க அரசியலுக்கு எதிர்நிலையில் இந்தப் பன்மைத்துவ நிறுவல்கள் ஏற்படுகின்றன. இவ்வாறான போக்குகளின் ஒரு நிலையில் இருந்தே தமிழின் கலை, அறிவுமரபுகளின் தொன்மை, தனித்தன்மை முதலியவற்றின் முக்கியத்துவத்தைக் காணவேண்டியிருக்கிறது. அந்த வகையில் வரலாற்று நோக்கில் மணிமேகலை காட்டும் பழந்தமிழர் வாணிகத்தை ஆராய்வது முக்கியமானதாகிறது.

**பழந்தமிழர் வாணிகமும் வரலாற்றுப் போக்குகளும்**

தமிழர் வாணிகம் உலக அளவினதாகச் செவ்வியல் காலந்தொட்டு வரலாற்றுக்காலந்தோறும் இருந்துவருவதை இலக்கியம், கல்வெட்டு, தொல்லியல், நாணயம், வெளிநாட்டவர் குறிப்புகள் எனப் பலவற்றின்மூலமாக அறியமுடிகிறது. காவிரிப் பூம்பட்டினம், தொண்டி, நாகை போன்ற கீழைக் கடற்கரைத்துறைமுகங்களில் இருந்து சீனா, ஜாவா, சுமத்திரா போன்ற கிழக்கு மற்றும் தென்கிழக்காசிய நாடுகளுடன் வாணிகத் தொடர்புகள் நடந்திருக்கின்றன. அதைப்போலவே முசிறி, மங்களூர் போன்ற மேலைக் கடற்கரைத் துறைமுகங்களிலிருந்து அரபுநாடுகள், கிரேக்க- ரோமானிய நாடுகளிடையே வாணிகம் நடந்திருக்கின்றன. இவற்றிற்கான இலக்கியச் சான்றுகள் பலநிலைகளில் இருப்பினும் தொல்லியல், கல்வெட்டு முதலிய சான்றுகள் புதிதுபுதிதாகக் கிடைத்துவருகின்றன. சான்றாக முசிறி, காவிரிப்பூம்பட்டினம், பொருந்தல், கீழடி, ஆதிச்சநல்லூர் போன்ற இடங்களில் உள்ள அகழாய்வுகள் இவற்றிற்கு வலுசேர்க்கின்றன.

> **“நளியிரு முந்நீர் நாவா யோட்டி**
> **வளிதொழி லாண்ட வுரவோன் மருக”**[1]

என்று கடல் வணிகம் குறித்தும்,

> **“அணர்ச்செவிக் கழுதைச் சாத்தோடு வழங்கு**
> **முல்குடைப் பொருவழிக் கவலை காக்கும்**
> **வில்லுடை வைப்பின் வியன்காட் டியவு”**[2]

என்று தரைவணிகம் குறித்தும் நிறைய குறிப்புக்கள் சங்கத் தொகை நூல்களிலும் சிலப்பதிகாரம், மணிமேகலை என்று காப்பியங்களிலும் மிகுதியாக உள்ளன. “கொல்லத்துறை, எயிற்பட்டினம், அரிக்கமேடு, காவிரிப்பூம்பட்டினம், தொண்டி, மருங்கை, கொற்கை போன்ற கிழக்குக் கடற்கரைத் துறைமுகங்களில் இருந்து, பர்மா (காழகம்), சீனா, இலங்கை, ஜாவா-சுமத்ரா (கிழக்கிந்திய & இந்தோனேசியத் தீவுகள்), போன்ற கிழக்காசிய நாடுகளிடையேயும் பாடலிபுத்திரம், வாரணாசி போன்ற உள்நாட்டுப் பகுதிகளிடையேயும் வாணிப உறவுகள் இருந்தன. அத்துடன் கிரேக்கம், ரோம் போன்ற மேற்கு நாடுகளிடையேயும் வாணிப உறவு கொண்டிருந்தன. அகில், சந்தனம், ஆரம், கற்பூரம், மிளகு, பொன், மணி, துகில் முதலியன இக்கடல் வணிகத்தில் முதன்மையாக இருந்தன”[3].

“மங்களூர், தொண்டி, முசிறி, மாந்தை, வைக்கறை, விழிஞம் போன்ற மேற்குக் கடற்கரைத் துறைமுகங்களில் இருந்து கிரேக்கம், ரோம், அரபுநாடுகள் ஆகிய நாடுகளுடன் வாணிப உறவு இருந்தது.

கண்ணாடி, செம்பு, தகரம், ஈயம் போன்றன இறக்குமதி செய்யப்பட்டு, மிளகு, அரசி, இஞ்சி, கரவப்பட்டை, அகில், சந்தனம், மயில்தோகை, தந்தம் முதலியன ஏற்றுமதி செய்யப்பட்டன. இவ்வாறான சான்றுகளை தாலமி, பெரிபுளூஸ் போன்ற வெளிநாட்டவர்களின் குறிப்புகளும் செவ்வியல் இலக்கியச் சான்றுகளும் விரிவாகத் தருகின்றன”[4]. இதன் தொடர்ச்சியாக “கிரேக்க மொழியில் அரிசி, இஞ்சி, இலவங்கப் பட்டை முதலிய தமிழ்ப் பெயர்கள் சென்றன”[5] என்று அம்பேத்கர் குறிப்பிடுகிறார்.

இவ்வாறு செவ்வியல் காலத்தில் விரிவான முறையில் கிழக்கு மற்றும் மேற்குக் கடற்கரைத் துறைமுகங்களில் இருந்து கிழக்காசிய நாடுகளுக்கும் மேற்கு நாடுகளுக்கும் வாணிகத்தொடர்பு இருந்துள்ளதை அறிய முடிகிறது. சங்க காலம், களப்பிரர் காலம் ஆகிய காலங்களில் உலகளவிலான வணிகத்தொடர்பு விரிவாக இருந்து பின் பல்லவர்காலம், பிற்காலச் சோழர்காலங்களில் அதன் போக்கு மெல்லக் குறைந்தது எனக் கூறலாம். என்றாலும் இராஜராஜ சோழன், இராசேந்திர சோழன் முதலியோர்களின் தென்கிழக்காசிய நாடுகளுடனான தொடர்புகள் முக்கியமானவைகளாக இருந்தன. பின்னர் டச்சுக்காரர், போர்ச்சுக்கீசியர், பிரெஞ்சுக் காரர், ஆங்கிலேயர் முதலியோரின் தொடர்ச்சியான வாணிப, பண்பாட்டு, அரசியல் உறவுகள் இந்திய, தமிழக வரலாற்றில் பெரிய மாற்றங்களை ஏற்படுத்தின. அதாவது உலக அளவிலான புதிய பார்வைகளை உருவாக்கின. ஐரோப்பிய மறுமலர்ச்சி, தொழிற்புரட்சி முதலிய போக்குகள் இவற்றிற்கு அடிப்படைகளாயின.

**களப்பிரர்கால வாணிகநிலை**

கருநாடகப் பகுதியைச் சார்ந்தவர்களைக் களப்பிரர்கள் என ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர் (மயிலை.சீனி. வேங்கடசாமி, களப்பிரர் ஆட்சியில் தமிழகம், மக்கள் வெளியீடு, சென்னை. ப. 16-17:1976). சமண, பௌத்த சமயங்களின் செல்வாக்கும் வணிக வர்க்கத்தின் எழுச்சியும் ஒருசேர இருந்த காலமாக களப்பிரர்காலத்தைக் குறிப்பிட இயலும். வாணிகத்தில் கீழை, மேலைக் கடற்கரைத் துறைமுகங்கள் முதன்மையாக இருந்தன. இங்கிருந்து உள்நாட்டுத் தரைவழி வாணிகமும் மேலோங்கி இருந்தது. இத்தகைய சமூக, பண்பாட்டு அரசியல் சூழலில் சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய காப்பியங்கள் வருகின்றன. இரு காப்பியங்களும் வணிக வர்க்கத்தின் பின்னணியில் இருந்து வருகின்றன. அந்த வகையில் மணிமேகலை பௌத்த சமயம் மற்றும் வணிக வர்க்கத்தின் பகுதியாக அமைவதைக் காணவியலும்.

**வரலாற்று நோக்கில் மணிமேகலை காட்டும் பழந்தமிழர் வாணிபம்**

மணிமேகலை கி.பி. 2ஆம் நூற்றாண்டின் இறுதியாக இருக்கலாம் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர். மணிமேகலை முன்வைக்கும் பழந்தமிழர் வாணிகம் செவ்வியல்கால வாணிகத்தின் தொடர்ச்சியாக அமைகிறது. குறிப்பாகக் கீழக்கடற்கரை வாணிகம் குறித்து விரிவாகச் சொல்கிறது. மேலைக்கடற்கரை குறித்தும் சொல்கிறது. அயல்நாடுகளில் இருந்து வரும் பொருட்கள் உள்நாடுகளில் விற்பனை செய்யப்பட்டன; உள்நாடுகளில் உற்பத்தி செய்யப்படும்பொருட்கள் அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. இவற்றைப்போலவே உள்நாட்டுப் பொருட்கள் உள்நாடுகளிலும் பரிமாற்றம் செய்யப்பட்டன. அந்தவகையில் வரலாற்று நோக்கில் மணிமேகலைகாட்டும் பழந்தமிழர் வாணிகத்தை, உள்நாட்டு வாணிகம், அயல்நாட்டு வாணிகம் என இரண்டாகப் பகுத்தும் பௌத்த மெய்யியல் நிலையில் அதன் வாணிக அறத்தையும் பகுத்து ஆராயும் நிலையில் இக்கட்டுரை அமைகிறது.

**உள்நாட்டு வாணிகம்**

உள்நாட்டு வாணிகம் என்பது தரைவழி, தரைவழியை முதன்மைப் படுத்திய கடற்கரைப் பகுதிகள் ஆகிய பகுதிகளில் நடைபெறுவதைக் குறிக்கும். சங்ககாலம் முதல் உள்நாட்டு வாணிகம் நடைபெற்றிருக்கிறது என்பதைத் தொல்லியல், கல்வெட்டியல், இலக்கியம் எனப் பல்வேறு சான்றுகளின் மூலம் அறிய முடிகிறது. உள் நாட்டு வாணிகம் (தரை, கடல்) இரண்டு வழிகளிலும் நடைபெற்றிருக்கிறது. வணிகம் செய்பவர்களுக்கு 'எட்டி' என்கிற பட்டம் வழங்கப்பட்டிருப்பதை, மணிமேகலை,

**"வாணிக மரபின் வருபொரு ளீட்டி**
**நீணிநிதிச் செல்வனாய் நீணில வேந்தனின்**
**எட்டிப் பூபெற் றிருமுப் பதிற்றியாண்**
**டொட்டிய செல்வத் துயர்ந்தோ னாயினன்"**[6]

என்று வாணிகத்து மரபினாலே வந்து சேரும் பொருட் செல்வத்தைச் சேர்த்துப் பெருநிதியடைந்த செல்வனாகி பெருநிலத்தினையாளும் பாண்டிய மன்னனாலே எட்டியென்னும் பட்டமும் பெறுக எனக் குறிப்பிடுகிறது. 'எட்டி குமரன்' என்று பளிக்கறை புக்க காதையிலும் (58,64) குறிப்பு வருகிறது. 'எட்டி என்பதற்கு உ.வே.சாமிநாதையர் வைசியர் பெறும் பட்டம் என்கிறார். எனவே பெருவணிகருக்கு அரசால் வழங்கப்படும் பட்டமாக இது இருக்கிறது என்பதை அறிய முடிகிறது. தமிழக வணிகர்கள் கொற்கை, தொண்டி, பூம்புகார், சோப்பட்டினம் போன்ற கடல் கரையோர ஊர்களில் வணிகம் செய்துள்ளார்கள்.

அரசனின் பொன் மண்டபத்துத் தூண்களும் போதிகைகளும், மகதம், மராட்டம், அவந்தி, யவனம் முதலிய நாடுகளைச் சேர்ந்த தொழில் வல்லுநர்களால் உருவாக்கப்பட்டிருக்கின்றன என்பதை,

**"மகத வினைஞரும் மராட்டக் கம்மரும்**
**அவந்திக் கொல்லரும் யவனத் தச்சரும்**
**தண்டமிழ் வினைஞர் தம்மொடு கூடிக்**
**கொண்டினி தியற்றிய கண்கவர் செய்வினை"**[7]

எனக் கூறுவதமூலம் பல்வேறு உள்நாட்டில் வாணிகமும் செல்வமும் செழித்து விளங்கியிருந்தமையை உணர முடிகிறது. கச்சிமாநகரில் சங்குகளை அறுத்து அணிகலன் செய்வோர் உள்ள தெருவை,

**"விலங்கரம் பொரூஉம் வெள்வளை போழ்நரோ**
**டிலங்குமணி வினைஞ ரிரீஇய மறுகும்"**[8]

என்று கச்சிமாநகர் புக்ககாதை கூறுகிறது. **'காணம்'**[9] என்ற நாணயம் புழக்கத்தில் இருந்திருக்கிறது. "காணம் என்பது வெள்ளிக்காசாகவோ செம்புக் காசாகவோ இருக்க வேண்டும்"[10] சாவகம் போன்ற வெளிநாடுகளில் இருந்து கொண்டுவரப்பட்ட பொருட்கள் உள்நாடுகளில் பயன்படுத்தப் பட்டதையும் மணிமேகலை குறிப்பிடுகிறது. "இலவங்கம், சாதிக்காய், குங்குமப்பூ, பளித வகை (கற்பூர வகை) முதலியன இப்படி விற்கப்பட்டன. புத்த துறவிகள் உணவு உண்டபின் வெற்றிலையோடு பளிதம் என்றொரு கற்பூர வகையைச் சேர்த்து உண்டனர்"[11].

இவ்வாறு மணிமேகலை குறிப்பிடும் உள்நாட்டு வணிகம் என்பது அயல்நாட்டு வணிகத்தின் ஒரு பகுதியாகவும் உள்நாட்டு வணிகமாகவும் விளங்கியிருக்கிறது. அரசின் செல்வாக்கோடு நெருக்கமாகவும் பல்வேறு நாடுகளுடன் தொடர்புடையதாகவும் இருந்திருக்கிறது. அணிகலன், உணவுப் பொருட்கள் என்று பலவும் உள்நாட்டு வாணிபத்தின் பகுதியாக இருந்திருக்கின்றன.

**அயல்நாட்டு வாணிகம்**

பழந்தமிழகத்தின் அயலக வாணிகம் கிழக்கு, மேற்குக் கடற்கரைத் துறைமுகங்களின்வழியே நிகழ்ந்தது. "கிழக்குக் கடற்கரைத் துறைமுகங்களாக, கொல்லத்துறை, எயிற்பட்டினம், அரிக்கமேடு,

காவிரிப்பூம்பட்டினம், தொண்டி, மருங்கை, குமரி முதலியனவும் மேற்குக் கடற்கரைத் துறைமுகங்களாக, மங்களூர், நறவு, தொண்டி, முசிறி முதலியனவும் இருந்தன”[12].

மணிமேகலையில் உள்நாட்டு வாணிகத்தைக் காட்டிலும் அயல்நாட்டு வாணிகக் குறிப்புகளே பெரிதும் காணப்படுகின்றன. அதிலும் குறிப்பாகக் கிழக்குக் கடற்கரைத் துறைமுகங்களின் வழியே நடைபெற்ற வணிகத்தையே பெரும்பகுதி முதன்மைப்படுத்துகிறது. காவிரிப்பூம்பட்டினம், மணிபல்லவம் (யாழ்ப்பாணம்), சாவகம் (ஜாவா), நாகர்மலை (நிக்கோபர் தீவு) போன்ற பகுதிகளுக்கிடையே வாணிபத்தின் பொருட்டும் அதன் அடிப்படையாக நடைபெற்ற பயணங்கள் குறித்தும் மணிமேகலை விரிவாகக் கூறுகிறது. “தமிழகத்துக் கப்பல் வணிகர் சாவக நாட்டுக்குக் கடல் கடந்துப் போய் அங்கு உண்டான வாசனைப் பொருள்களையும் பவழத்தையும் சீனத்திலிருந்து அங்குக் கொண்டு வரப்பட்ட பட்டுத்துகிலையும் கொண்டு வந்து பழந்தமிழ் நாட்டில் விற்றார்கள்”[13] என்கிறார் மயிலை.சீனி.வேங்கடசாமி. அதாவது தென்கிழக்கு ஆசியா, சீனா, இலங்கை, சாகவகம் போன்ற நாடுகளுடன் வாணிகத்தொடர்பு ஏற்பட்டிருக்கிறது. சாவக தீவில் விளைந்த இலவங்கம், சாதிக்காய், குங்குமப்பூ, பளித வகை (கற்பூர வகை) முதலான இறக்குமதி செய்யப்பட்டு பழந்தமிழகத்தில் பயன்படுத்தப்பட்டன.

கிழக்குக் கடற்கரை அயல்நாட்டு வணிகத்தில் சாவகம் மிக முக்கியமான இடத்தை வகித்தது. இது கிழந்தியத் தீவுகளைக் குறிக்கும் அதில் முதன்மையான தீவு ஜாவா ஆகும். சீனாவிற்கும் பழந்தமிழகத்தின் கீழைக் கடற்கரைக்குமான முக்கியமான வாணிகத் தொடர்பை இது ஏற்படுத்தியது. “கிழக்கிந்தியத் தீவுகளில் (ஜாவா) விளையும் பொருட்களைச் சீனர்களும் பழந்தமிழர்களும் இறக்குமதி செய்தனர். சீனப் பட்டு சாவகம் வழியாகப் பழந்தமிழகத்துக்கு வந்தது. சேரநாட்டில் விளைந்த மிளகை கிரேக்கர்கள் இறக்குமதி செய்தபின்பு தமிழகத்தில் ஏற்பட்ட மிளகுத் தட்டுப்பாட்டை சாவகத்தீவின் மிளகு சரிசெய்தது. பழந்தமிழகத்தின் சந்தனத்தைவிடவும் சாவகத்தின் சந்தனத்திற்கு மதிப்பு அதிகமாக இருந்தது”[14].

மணிமேகலை, பாண்டிய, சோழநாடுகள் சாவக நாட்டுடன் வாணிகம் செய்தனவற்றை விரிவாகக் கூறுகிறது. மணிபல்லவம் இடைநிறுத்தத் துறைமுகமாக அமைகிறது. பாத்திரமரபு கூறிய காதை, ஆதிரை பிச்சையிட்ட காதை, ஆபுத்திரனாடடைந்த காதை, ஆபுத்திரனோடு மணிபல்லவமடைந்த காதை முதலிய காதைகள் சாவக நாட்டுடனான வாணிகத் தொடர்பையும் அதனோடு இணைந்த பௌத்த சமயத் தொடர்பையும் விரிவாகக் கூறுகின்றன. ஆதிரை பிச்சையிட்ட காதை, சாதுவன் சாவகநாட்டு வணிகப்

பயணத்தில் கப்பல் உடைந்து நாகர்மலைத் தீவுக்குச் சென்று தங்கியிருந்து பின், சந்திரதத்தன் சாவகநாட்டு வணிகத்திலிருந்து திரும்பி வரும்போது அவனுடன் காவிரிப் பூம்பட்டினத்துக்கு வந்துசேர்கிறான் என்ற கதையைக் கூறுகிறது. வாணிகர்கள் கொண்டுவரும் பொருள்களாக,

**"விரைமரை மென்றுகில் விழுநிதிக் குப்பை"**[15]

என்று சந்தனம், அகில், மெல்லிய ஆடை மற்றும் வாசனைத் திரவியங்களைக் கொண்டுவருவர் எனக் குறிப்பிடுகிறது. இவற்றுள் சந்தனம், அகில், வாசனைத் திரவியங்கள் சாவக நாட்டுப் பொருட்களாகவும் துகிலாகிய மெல்லிய ஆடை சீனத்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்டதாகவும் இருக்கிறது. "ஆபுத்திரனோடு மணிபல்லவமடைந்த காதை, சாவகநாட்டு அரசன் புண்ணியராசன் சோழன் கிள்ளிவளவனோடு நட்பு கொண்டிருந்தான் என்பதை, 'கிள்ளி வளவனொடு கெழுதகை வேண்ட'[16] குறிப்பிடுகிறது. இது வணிகத்தின் பொருட்டாக இருக்கும் என மயிலை.சீனி. வேங்கடசாமி கருதுகிறார்[17]. பாத்திரமரபு கூறிய காதை, ஆபுத்திரன் சாவகநாடு செல்லும் நிலையில் மணிபல்லவம் தங்குவது குறித்து,

**"வங்க மாக்களொடு மகிழ்வுட னேறிக்**
**கல்விசை கடுக்க் கடல்கலக் குறுதலின்**
**மாலிதை மணிபல் லவத்திடை வீழ்த்துத்**
**தாங்கிய தொருநாள்"**[18]

இவ்வாறு கூறுகிறது. எனவே சோழநாடு, பாண்டியநாட்டுடன் சாவக நாடு நெருங்கிய வாணிகத்தொடர்புடன் இருந்ததை அறிய முடிகிறது. அதாவது சீனா மற்றும் சாவகம் முதலிய கிழக்காசிய நாடுகளுக்கும் காவிரிப்பூம்பட்டினத்துக்குமான வணிக உறவில் சாவகம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த வணிகப் பரிமாற்ற இடமாக இருந்திருக்கிறது. இந்த வணிகத்தின் பகுதியாகவே பௌத்த சமயம் சோழநாட்டில் விரிவாகவும் மணிபல்லவம் (யாழ்ப்பாணம்) முதல் சாவகநாடுவரை அயல் நாடுகளிலும் பரவிய தன்மையையும் மணிமேகலை கூறுகிறது. இதற்குச் சான்றாக, ஆபுத்திரனாடடைந்த காதை, மணிமேகலை, சாவகத்தீவின் தலைநகர் நாகபுரத்துக்குச் சென்று தருமசாரணர் என்னும் பௌத்தத் துறவியைச் சந்தித்து வந்தாள் என்று குறிப்பிடுகிறது.

மணிமேகலை குறிப்பிடும் அயல்நாட்டு வணிகம் என்பது சாவகநாட்டுடனான வணிகத்தை விரிவாகவும் அதன் பகுதியாக மணிபல்லவம், நக்கசாரணர் நாடு முதலிய குறிப்புகளும் இடம்பெறுகின்றன. சீனா, சாவகநாட்டுப் பொருட்கள் காவிரிப் பூம்பட்டினத்திற்கு இறக்குமதி செய்யப்பட்ட தகவல்களைக் கூறுகிறது. அத்துடன் யவனர் போன்ற மேலைக்கடற்கரைவழியாக வந்த கிரேக்கத் தொடர்புகளையும்

மகதம், மராட்டியம், வஞ்சி, காஞ்சி முதலிய உள்நாட்டு நகரங்கள், அவைகளுடனான தொடர்புகள் குறித்தும் கூறுகிறது. இந்த வணிகத் தொடர்புகளினூடாக பௌத்த சமயத் தொடர்புகளைக் கூறுகிறது. அதாவது வணிகமும் பௌத்தசமயப் பரவலாக்கமும் ஒன்றுடன் ஒன்று இணைந்ததாக இருக்கிறது என்பதை மணிமேகலை காட்டுவதற்கு அயல்நாட்டு வணிகம் முக்கியமான சான்றாகிறது.

**வாணிக அறம்**

மணிமேகலை பௌத்த அறவியலை முன்வைக்கும் காப்பியமாதலால், வணிகமும் அறத்தின் அடிப்படையிலேயே அமைகிறது. "மரக்கலம் உடைந்து சாரணர்களுடன் தங்கியிருந்து அவர்களை பௌத்த நெறியில் நல்வழிப்படுத்திய சாதுவன், சாவகநாட்டு வணிகம் முடித்து சந்திரதத்தன், திரும்பிவருகையில், சாரணர்களின் நாக அரசன் சந்தனம், துகில், வாசனை முதலிய பல பொருட்களை சாதுவனுக்குக் கொடுத்து அனுப்புகிறான். சாதுவன் அந்தப் பொருட்களை எல்லாம் கொண்டுவந்து தான் துய்க்காமல் எல்லோருக்கும் தானமாகக் கொடுத்தான்"[19]. இது வணிக அறமாக அமைகிறது.

தருமதத்தன் என்பான் விசாகையைத் திருமணம் செய்து கொள்ள விரும்பி, கடல்கடந்து வாணிகம் செய்ய செல்கிறான். அறுபது ஆண்டுகள் உழைத்து பெரும் செல்வந்தனாக மாறி அரசனால் 'எட்டி' எனும் பட்டத்தையும் பெறுகிறான். அந்தணனின் வழிகாட்டலின்படி விசாகையிடம் மணஞ்செய்துகொள்ளும்படி கூற, விசாகை,

**"இளமையும் நில்லா யாக்கையு நில்லா**
**வளவிய வான்பெருஞ் செல்வமு நில்லா**
**புத்தே ளுலகம் புதல்வருந் தாரார்**
**மிக்க வறமே விழுத்துணை யாவது**
**தானஞ் செய் எனத் தரும தத்தனும்**
**மாமன் மகள்பால் வான்பொருள் காட்டி**
**ஆங்கவ னவளுடன் செய்த நல்லறம்**
**ஓங்கிரு வானத்து மீனும் பலவால்"[20].**

இளமை என்பது என்றும் நிலையானதில்லை, இவ்வுடலும் நிலையானதில்லை, வளமான பெருஞ்செல்வமும் நிலையானதில்லை, தேவருலகை புதல்வர்களாலும் பெற இயலாது. எல்லாவற்றாலும் மேம்பட்ட அறமே சிறந்த துணையாக அமையும். எனவே தானம் செய்வாயாக என்று கூறுகிறாள். விசாகையுடன் சேர்ந்து தருமதத்தன் சேமித்த செல்வங்களை எல்லாம் நல்லறங்களுக்காகச் செலவிட்டான். இந்தத் தருமங்கள் விண்மீன்களைக் காட்டிலும் மிகப் பலவாக இருந்தன என்று மணிமேகலை கூறுகிறது. ஆக, இங்கு வாணிகத்தை முதன்மைப்படுத்தி மட்டுமே மணிமேகலை அமையவில்லை. வாணிகத்தின் நோக்கம், வாழ்வின் நோக்கம் என்பது அறமாக, பௌத்த நன்னெறியாக அமைகிறது. இந்த வகையில் வணிகமும் பௌத்த அறத்தின்பொருட்டே அமைவது இதன் தனிச்சிறப்பாகும்.

**முடிவுரை**

மணிமேகலை காட்டும் பழந்தமிழ் வாணிகம் என்பது சங்ககால கீழை, மேலைக் கடற்கரைகளை அடிப்படையாகக் கொண்ட அயல்நாட்டு மற்றும் உள்நாட்டு வணிகத்தின் தொடர்ச்சியாக அமைகிறது. அதாவது பன்னாட்டு வணிகம் சிறப்புடன் இருந்தமையைக் காட்டுகிறது. குறிப்பாகக் கிழக்குக் கடற்கரைக்கும் சீனா, சாவகம் முதலிய நாடுகளுக்குமிடையிலான வாணிகத் தொடர்பை மையமாகக்

கொண்டு மணிமேகலை அமைகிறது. வணிகமும் பௌத்த சமயப் பரவலாக்கமும் ஒன்றுடன் ஒன்று இணைந்ததாக மணிமேகலை முன்வைக்கிறது. வணிகத்தினூடே பௌத்த அறவியல் நெறியை நக்கசாரணர் வாழுமிடம் சாவகம், மணிபல்லவம் முதலிய நாடுகளுக்குச் சென்று பரப்பும் நிலையில் மணிமேகலை அமைகிறது. அத்துடன் வணிகம் என்பது பொருளீட்டல் என்ற ஒற்றை நோக்கமாக இல்லாமல் பௌத்த அறநெறியை முதன்மைப் படுத்தியதாக அமைகிறது. செல்வத்தின் பயனை நுகர்வதல்ல, எல்லோருக்கும் பகிர்ந்து கொடுத்தலே என்பதை மணிமேகலை வலியுறுத்துகிறது. அந்தவகையில்தான் வணிகநடவடிக்கைகள் முன்வைக்கப்படுகின்றன. எனவே மணிமேகலை காட்டும் பழந்தமிழர் வணிகம் என்பது சங்ககாலப் பழந்தமிழ் வணிகத்தின் தொடர்ச்சியாகவும் பௌத்த அறவியலை முதன்மைப்படுத்தும் நோக்கிலும் அமைகிறது எனக் கூறவியலும்.

**சான்றெண் விளக்கம்:**


1. புறநானூறு, பாடல் எண். 66.
2. பெரும்பாணாற்றுப்படை, அடிகள் 73-82.
3. வேங்கடசாமி.சீனி., பழங்காலத் தமிழர் வணிகம், பக். 64-87.
4. மேலது, பக். 88 - 97.
5. டாக்டர் பாபாசாகேப் அம்பேத்கர்: பேச்சும் எழுத்தும், நூல் தொகுப்பு: தொகுதி 23 – ப. 29
6. மணிமேகலை, 22: 111 -114.
7. மேலது, 19: 107 - 108.
8. மேலது, 28: 44 – 45.
9. மேலது, 23: 54.
10. வேதாசலம்.வே., பாண்டிய நாட்டில் வணிகம் வணிகர் வணிக நகரங்கள், ப. 75.
11. மணிமேகலை, 28: 241- 243.
12. வேங்கடசாமி.சீனி., மு.கு.நூ, ப. 88.
13. மேலது., ப.39.
14. மேலது., ப. 38.
15. மணிமேகலை, 16: 122.
16. மேலது, 25: 14.
17. வேங்கடசாமி.சீனி., மு.கு.நூ., ப. 60.
18. மேலது., 14: 73 – 82.
19. மேலது., 16: 120 – 128.
20. மேலது., 22: 136 – 142.

**துணை நூல்கள்:**

1. சாமிநாதையர், உ.வே., பதிப்பாசிரியர், பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியர் உரையும், கேசரி அச்சுக்கூடம், சென்னை. 1931
2. சாமிநாதையர், உ.வே., பதிப்பாசிரியர், புறநானூறு, கமர்ஷியல் அச்சுக் கூடம், சென்னை. 1923.
3. வேங்கடசாமி. மயிலை. சீனி., பழங்காலத் தமிழர் வணிகம், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை 1978.
4. டாக்டர் பாபாசாகேப் அம்பேத்கர்: பேச்சும் எழுத்தும், நூல் தொகுப்பு: தொகுதி 23, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2001.
5. சாமிநாதையர். உ.வே., பதிப்பாசிரியர், மணிமேகலை, டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல்நிலையம், சென்னை. 2013.
6. வேதாசலம்.வே., பாண்டிய நாட்டில் வணிகம் வணிகர் வணிக நகரங்கள், தனலட்சுமி பதிப்பகம், மதுரை. 2024.

**Reference books:**

1. Saminathaiyar, U.Ve., Editor, Paththuppattu Mulamum Nachinarkiniyar Uraiyum Kesari Press, Chennai. 1931.
2. Saminathaiyar, U.Ve., Editor, Purananooru, Kamarshiyal Press, Chennai. 1923.
3. Venkatasami. Mayilai. Seeni., Palangala Tamilar Vanikam, NCBH, Chennai. 1978.
4. Dr. BR. Ambetkar : Speeks and Writings, Collection of Books: Vol.23, NCBH, Chennai. 2001.
5. Saminathaiyar, U.Ve., Editor, Manimekalai, Dr. U. Ve. Saminathaiyar Book house, Chennai. 2013.
6. Vedachalam.V., Pandiyanattil Vanikam Vanikar Vanika Nagarangal, Dhanalaxmi Publication, Madurai. 2024.

License

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.
Our journal adopts CC BY License Creative Commons Attribution 4.0 International License http://Creativecommons.org//license/by/4.0/ . It allows using, reusing, distributing and reproducing of the original work with proper citation.